**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி</u>**

<u>2023 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள் சனிக்கிழமை</u>

**<u>இ.ம.எண்.1617/2017 இன் அ.வ.எண்.277/2017</u>**

ரத்தினம் ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

சுவாமிநாதன் எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 05.09.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.P.லதா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.ஹரிபிரசாத் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் எதிருரை சங்கதிகளின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**<u>ஆணையுரை</u>**

நீதிமன்ற ஆணையரை நியமித்து தாலூக்கா நில அளவையர் உதவியுடன் மனுச்சொத்துக்களை பார்வையிட்டு, 29..08.1955 தேதியிட்ட 708/1955 பதிவு எண் கொண்ட பாகப்பத்திரத்தின்படி அளவை செய்து எல்கைகளை நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில் இம்மனுவை முடிவு செய்வதற்கு அவசியமான சங்கதிகள் மட்டும் பின்வருமாறு:– கடந்த 29.08.1955 தேதியிட்ட

பாகப்பத்திரத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வழக்கு ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். பி ஷெட்யூல் சொத்தான 4.60 ஏக்கரில் ஒரு பகுதியான 2.30 ஏக்கர் சொத்தை மேற்படி பாகப்பத்திரத்தில் கண்ட ரங்கசாமி என்பவரிடமிருந்து மனுதாரர்/வாதியின் கணவரின் தாய்வழி பாட்டியான பழனாத்தாள் என்பவர் 15 லிங்ஸ் வண்டித்தட உரிமையுடன் கிரையம் பெற்றார்.

3) 29.08.1955 தேதியிட்டபாகப்பத்திரப்படி அதில் கண்ட தரப்பினர்கள் சொத்தினை பாகம் செய்து கொண்டாலும், அவ்வாறு பாகம் செய்து கொண்ட தங்களது பாக சொத்துக்களை அளவீடு எதுவும் செய்யவில்லை. ஆகவே மனுதாரர்/வாதி பொள்ளாச்சி வட்டாட்சியரிடம் சொத்துக்களை அளவை செய்ய வேண்டும் என்று மனு கொடுத்தார். அந்த மனுவின் அடிப்படையில் கடந்த 23.11.2011 அன்று அறிவிப்பு கொடுத்து அளவை செய்ய வந்த போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆட்சேபணை செய்தார். அவ்வாறு மனுதாரர் தரப்பில் சொத்துக்களை அளவீடு செய்ய பல முயற்சிகள் எடுத்தும் எதிர்மனுதாரர் ஆட்சேபித்து பிரச்சனை செய்தார். இதுகுறித்து குற்ற வழக்கும் நடந்து வருகிறது.

4) வழக்கு சி அட்டவணை சொத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆகவே நீதிமன்ற ஆணையர் நியமித்து தாலூக்கா நிலஅளவையர் உதவியுடன் கடந்த 29.08.1955 தேதியிட்ட பாகப்பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்களை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளது.

5) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல்வழக்கில் தாக்கல் செய்துள்ள தனது எதிர்வாதத்தை இம்மனுவிற்கு எதிருரையாக ஏற்றுக்கொள்ள வேண்டி

குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வாதத்தை பரிசீலனை செய்கையில் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்திருந்தாலும், வழக்கு சொத்துக்களை அளவீடு செய்வதற்கு தங்கள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என தெரிவித்துள்ளார்.

6) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

7) <u>பிரச்சினை</u> :

வழக்காவணங்கள் மற்றும் மனுவில் கண்ட சங்கதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். வழக்கு சி அட்டவணைசொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் வழக்கு ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், கடந்த 29.08.1955 தேதியிட்ட பாகப்பிரிவினையில் கண்ட சொத்துக்களே வழக்கு சொத்துக்கள் என்றும், ஆனால் பாகப்பிரிவினை ஏற்பட்டபோதே அல்லது அதற்கு பிறகோ வழக்கு சொத்துக்கள் அளவீடு செய்யப்படவில்லை என்றும், ஆகவே எதிர்மனுதாரர் வழக்கு சி அட்டவணை சொத்தில் தனக்கு உரிமை உள்ளதாக பிரச்சனை செய்து வருகிறார் என்றும், ஆகவே வழக்கு சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் உதவியுடன் அளவீடு செய்ய வேண்டும் என மனுதாரர் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையர் உதவியுடன் மனுசொத்துக்களை அளவீடு செய்ய ஆட்சேபணை இல்லை என்று அவர்களது எதிர்வாதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) ஒரு சொத்து குறித்து எல்லைகள் தொடர்பாகவோ அல்லது பௌதீக தன்மை தொடர்பாகவோ ஆக்கிரமிப்பு தொடர்பாகவோ ஒரு தரப்பில் தெரிவிக்கப்படும் சங்கதிகளை மறுதரப்பினர் மறுக்கும் பட்சத்தில் அந்த வழக்கில்

நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யலாம் என்பது நன்கு நிறுவப்பட்ட சட்ட விதியாகும்.

**10)** இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கிடையே சொத்துகளின் அளவுகள் குறித்து பிரச்சனை இருப்பது தெரிய வருகிறது. ஆகவே, வழக்கு சொத்துக்கள் அளக்கப்பட்டு, எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு, அதுகுறித்த அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்யப்பட்டால் இவ்வழக்கில் கண்ட பிரச்சனையை தீர்வு செய்வதற்கு உதவியாக இருக்கும். எனவே இம்மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்படுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் இம்மனு அனுமதிக்கப்படவேண்டும் என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**11)** முடிவில், வழக்கறிஞர் **திரு.G.கோபி MS.No.2521/2015** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்துக்களை 29..08.1955 தேதியிட்ட 708/1955 பதிவு எண் கொண்ட பாகப்பத்திரத்தின்படி தாலூக்கா நிலஅளவையர் உதவியுடன் இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து அளவை செய்து எல்கைகளை நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.8,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி, தொகையானது மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையருக்கு வரும் 03.10.2023 அன்றோ அல்லது அதற்கு முன்போ நேரடியாக செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. அழைக்க: 03.10.2023

இவ்வாணையுரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்யப்பட்டதை 2023 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.09.23 18:54:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**

– இல்லை –

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.09.23 18:54:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
பொள்ளாச்சி.

-----------------------------------

**அசல் ஆணையுரை**

ஐ.ஏ.1617/2017 இன் ஓ.எஸ்.277/2017

நாள் : 23.09.2023

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------